# செய்திகளும் குறிப்புகளும்

**06.03.2025, ஆரோவில்வாசிகளுக்கான தமிழ் வார ஏடு, ஆரோட்ரடுக்ஷன், எண்: 1098**

---

**ஸ்ரீ அரவிந்தர் - மனித சக்கரம்** (Human cycle)
**23. ஓர் ஆன்மீகக் காலத்தின் வருகைக்குரிய நிலைமைகள்**

சமுதாயம் அதனுடைய அறிவில், பிராணனில், நன்னெறியில், மனநிலையில் ஆயத்தமாக இராமல் இருக்கலாம், இதன் விளைபயனாக சமுதாயம் இறுதியில் ஆன்மீகக் கருத்தை ஏற்றுக்கொள்வது கூட அதனுடைய (ஆன்மீகக் கருத்தின்) இழிவுக்கும் மற்றும் உருத்திரிபுக்கும் தொடக்கமாகலாம், மேலும் அதன் விளைவாக சித்பொருளின் வெளியேறுதல் மற்றும் தாழ்வு ஏற்படலாம். இந்த வகையில் ஏதேனும் ஒன்றோ அல்லது அனைத்துமோ நிகழலாம்; மேலும் இதன் விளைவு பெரும்பாலும் கடந்த காலத்தில் நிகழ்ந்துள்ளபடி, ஏதோ ஒரு முன்னேற்றம் ஏற்பட்டு மேலும் ஒரு முக்கியமான மாறுபாடு தோற்றுவிக்கப்பட்ட போதிலும், அது மனித இனத்தை ஒரு தெய்வீக வடிவில் மறு-படைப்பு செய்யும் ஒரு தீர்மானமான மாற்றமாக இருந்திடாது.

அப்படிப்பட்ட சமுதாயத்தின் நிலை எப்படியிருக்கும், இந்த மாற்றத்திற்கு மிகவும் சாதகமான மனிதனின் பொது மனத்தின் ஆயத்தம் என்பது என்ன? இது உடனடியாகத் தன்னை நடைமுறைப்படுத்திக்கொள்ள முடியாவிட்டாலும், குறைந்தபட்சம் அதனுடைய வழிகளுக்கு இதுவரை முடிந்ததை விட அதிகமாக ஒரு தீர்மானமான தயாரிப்பைச் செய்ய முடியலாம் அல்லவா? ஏனென்றால், அதுதான் மிக முக்கியமான மூலக்கூறாகத் தோன்றுகிறது, அது தான், அந்த ஆயத்தமில்லாத நிலைதான், சமுதாயத்தின் அல்லது மனிதனின் பொதுமனத்தின் அந்தத் தகுதியின்மைதான், எப்பொழுதும் முட்டுக்கட்டையாக இருக்கிறது. இந்தப் பொதுமனத்தின் ஆயத்த நிலை தான் முதல் முக்கியத்துவம் வாய்ந்ததாகும்; ஏனென்றால் இந்த ஆன்மீக மாற்றத்திற்கு, சமுதாயத்தின் நிலை மற்றும் சமுதாயத்தைக் கட்டுப்படுத்தும் கொள்கை மற்றும் விதிமுறை எதிரானதாக இருந்தாலும் கூட, அவை பெரும்பாலும் பிராணனுக்கு, வெளிப்புறத்திற்கு, பொருளாதாரத்திற்கு, இயந்திர ஒழுங்கிற்கு உரியனவாக இருந்தாலும் கூட இப்போதும் மனிதக் கூட்டங்கள் நிச்சயமாக இப்படித்தான் இருக்கின்றன. பொது மனிதமனம் இறுதியில் இருக்கவேண்டிய உன்னத வகைக்கேயுரிய கருத்துக்களை ஏற்றுக்கொள்ளத் தொடங்குமாயின், மேலும் மனிதனுடைய இதயம் இந்தக் கருத்துக்களிலிருந்து பிறந்த ஆர்வங்களால் கிளர்ந்தெழத் தொடங்குமாயின், அப்பொழுது, அங்கே தொலைவில் இல்லாத வருங்காலத்தில், ஏதோ முன்னேற்றத்திற்குரிய ஒரு நம்பிக்கை இருக்கிறது. மேலும் இங்கே, வாழ்க்கை பற்றிய அகவுணர்வுக் கருத்தின் வளர்ச்சியே இதன் முதல் முக்கிய அறிகுறியாகும், - ஆன்மா பற்றிய கருத்து, உள்ஜீவன், அதனுடைய ஆற்றல்கள், அதனுடைய சாத்தியங்கள், அதனுடைய வளர்ச்சி, அதனுடைய வெளிப்பாடு மற்றும் முதலாவதான மற்றும் முடிவான முக்கியத்துவமாக, அதற்கு ஓர் உண்மையான, அழகான மற்றும் உதவிகரமான சூழ்நிலையை உண்டாக்குதல். மனித இனத்தின் சிந்தனையிலும் மற்றும் சமுதாய முயற்சியிலும் ஓர் அகவுணர்வுக் காலத்தின் முன்னோடிகளின் அறிகுறிகள் இருக்கவேண்டும்.

இக் கருத்துக்கள் பெரும்பாலும் முதலில் தத்துவத்தில், உளவியற் சிந்தனையில், கலைகளில், ஓவியத்தில், சிற்பத்தில், இசையில், நன்னெறியின் முக்கியக் கருத்துகளில், சமுதாயப் பிரச்சனைகளில் சிந்தனையாளர்கள் அகவுணர்வுக் கோட்பாடுகளைப் பயன்படுத்துவதில், கடினமான எதற்கும் மசியாத மண்ணுலக விஷயமாகிய கேவலமான பயன்பாட்டு நடைமுறை தவிர மற்றவற்றைத் தீவிரமாகத் தடுத்திடும் அரசியல் மற்றும் பொருளாதாரத்தில்கூட இது ஓர் ஆபத்தான முயற்சி என்ற போதிலும், இவற்றில் கூட, தங்கள் போக்கை, வெளிப்படுத்தலாம். ஏதிர்பாராத புதிய போக்குகள், விஞ்ஞானத்தில் அல்லது குறைந்தபட்சம், ஆராய்ச்சியில் இருக்கும் ஏனென்றால் இத்தகைய மிகப் பலனுடைய தேடல்களுக்குத் திரும்புவதற்கு, மரபு வழியாளர்கள் (orthodox) இன்னும் விஞ்ஞானம் என்ற பெயரைத் தர மறுக்கின்றனர். ஆன்மாவுக்கும் பருப்பொருளுக்கும் இடையே உள்ள சுவரை சன்னமாக்கும் கண்டுபிடிப்புகள் உண்டாகும்; உளவியல் மற்றும் சைத்தியத் துறைகளில் மிகச் சரியான அறிவை எட்டும் முயற்சிகள் செய்யப்படும்; இவற்றால், பருப்பொருளினின்றும் வேறானதும் இவற்றுக்கே உரியதுமான பல விதிகள் உள்ளன, ஆனால் அவை புறப் புலனுணர்வுகளிலிருந்து தப்புவதால் எந்த விதத்திலும் குறைந்த விதிகள் அல்ல, மேலும் அவை வரம்பின்றி இளக்கமுள்ளவை மற்றும் நுண்மையானவை என்ற உண்மை உணரப்படும். மதத்தில் அதனுடைய கடந்தகால இறந்துபோன விஷயங்களின் பளுவான சுமையை விட்டொழித்து, சித்பொருளின் நீரூற்றுகளில் அதனுடைய ஆற்றலுக்குப் புத்துயிரளிக்கும் கடும் முயற்சிகள் மேற்கொள்ளப்படும். வரப்போகிறவைகளின் அறிகுறியாக அல்லாவிடினும், குறைந்தபட்சம் இவை அதற்குரிய சாத்தியங்களின் நிச்சயமான ஒரு முயற்சி மேற்கொள்ளப்படும் என்ற உறுதிக்கு அடையாளம். அந்த முயற்சி விரிவான வீச்செல்லையுடையதாகவும், கேட்கப் பெற வேண்டும் என்ற கோரிக்கையுடைய உண்மையை உணரக் கூடியதாக மட்டுமன்றி, அதைப் புரிந்துகொள்ளக்கூடியதாகவுமுள்ள திறனுடைய அறிவாற்றல் கொண்டதாகவும் ஒருவேளை இருக்கலாம். இத்தகைய சில அறிகுறிகளை நாம் இப்போது காணலாம், ஆனால் அவை தொடக்க நிலையினவாக மற்றும் சிதறலானவையாக, மேலும் ஓர் ஆர்வத்துடன் எதிர்பார்க்கிற உறுதிப்பாட்டிற்கு அத்தாட்சிகூறும் அளவுக்கு வராதவையாக இருந்த போதிலும், அவ்வறிகுறிகளைக் காணமுடியும். இந்தத் துழாவும் தொடக்கங்கள் தாம் எதைத் தேடுகின்றனவோ அதைக் கண்ட பொழுதுதான், அதை மனிதனுடைய வாழ்க்கையை மீட்டுருவாக்குவதில் வெற்றிகரமாகப் பயன்படுத்த முடியும். அதுவரை பெரும்பாலும், ஓர் உள்ளார்ந்த தயாரிப்பைத் தவிரச் சிறந்ததாக வேறொன்றும் அடைந்துவிடமுடியும் என்று தோன்றவில்லை; மற்றவற்றைப் பொறுத்த மட்டில், அதன் கீழே சிக்குண்டு வாழ்க்கை முனகிப் பரிதவிக்கும் அந்த பிரம்மாண்டமான சிக்கலான இயந்திரத்தின் விவரங்களைப் பற்றிய அடிப்படையான அல்லது புரட்சிகரமான பரிசோதனைகள் ஐயப்பாட்டிற்குரிய விதத்தில் நடைபெறுகின்றன.

ஓர் அகவுணர்வுக் காலம் ஆன்மீகத்தை அடையாமல் தொலைவிலேயே நின்று விடக் கூடும். ஏனென்றால், அகவுணர்வுத் திருப்பம் ஒரு முதல் நிலை மட்டும்தான், அதுவே விஷயமல்ல, அதுவே இறுதியானதல்ல. உண்மையின் தேடல், மனிதனின் உண்மையான ஆன்மாவுக்கான தேடல், உபநிடதத்தில் வருணனின் புதல்வன் பிருகுவின் தேடல்களைப் பற்றிய அறிவாழமிக்க கதைப்பகுதியில் விவரித்து உள்ளதுபோல், அந்த இயற்கையான முறையைப் பின்பற்றலாம். ஏனென்றால் முதலில் தேடுவோன், பருப்பொருளையும், தூல உடலையும் இறுதி உண்மையாகவும் வெளிமனிதனை, பருப்பொருள் ஜீவனை நமது ஒரே ஆன்மாவாகவும் சித்பொருளாகவும் கண்டான். அடுத்தபடியில் வாழ்க்கையை உண்மையாகவும் பிராண ஜீவனை ஆன்மா மற்றும் சித்பொருளாக அவன் முடிவு செய்கிறான்; மூன்றாவது முயற்சியில் மனதையும் மனஜீவனையும் இம்மாதிரி காண்கிறான்; அதன்பிறகு மட்டுமே அவன் மேற்போக்கான அகவுணர்வைக் கடந்து அதிமன உண்மை உணர்வின் (Truth consciousness) மூலம் முடிவின்மைக்கு, ஆனந்தப் பரவச நிலைக்கு, இவைகள் மேலுறைகளாக இருக்கும் அந்த நித்தியப் படைப்பாற்றல் கொண்ட உண்மைக்குச் செல்லமுடிந்தது. ஆனால், மனித இனம், வருணனின் புதல்வனைப் போல் நிலைத்த உறுதியுடனோ அல்லது நெகிழ்ச்சித் தன்மையுடனோ இல்லாமல் இருக்கலாம். இந்தத் தேடல் அதற்கு முன்பாகவே எந்த கட்டத்திலும் நின்றுவிடலாம்; அது, அவன் இப்பொழுது இறுதியாக அடைவான் மற்றும் கண்டுபிடிப்பான் என விதிக்கப்பட்டிருந்தால் மட்டுமே, ஒவ்வொரு பற்றாத விதிமுறையையும், அது உருவாகிய உடனேயே, சித்பொருள் தகர்த்தெறியும், மேலும் மனிதச் சிந்தனையை மேலும் விரிவான கண்டுபிடிப்புக்கு, இறுதியில் அவையனைத்தையும் விட மிக விரிவான மற்றும் ஒளியார்ந்ததற்கு முன்னேறிச் செல்ல வற்புறுத்தும்.

*(தொடரும்......)*

**எஃப்ஏஎம்சியின் ஒரு முக்கியத் தகவல்** (An important information from the FAMC)

அன்பார்ந்த ஆரோவில்வாசிகள், அறங்காவலர்கள், நிர்வாகிகள், திட்டங்கள், கணக்காளர்கள் ஆகியோருக்கு,

**பொருள்: ஸோஹோ ஈஆர்பி (ZOHO ERP) உடன் ஆரோவில் ஒருங்கிணைந்த பொதுவான கணக்குப்பதிவை செயல்படுத்துதல் மற்றும் நிதிச்சேவை கணக்குகளை ஸோஹோ தளத்துடன் ஒருங்கிணைத்தல். நிதிச்சேவை செயல்பாடுகளை வங்கிக்கு மாற்றுதல்.**

ஆரோவில் பவுண்டேஷன் அறக்கட்டளை நிறுவனங்கள் (யூனிட்டுகள்) மற்றும் திட்டங்களுக்கான ஒரு மையப்படுத்தப்பட்ட பொதுவான கணக்குப்பதிவு அமைப்பு ஏற்கனவே 2024-25 நிதியாண்டிலிருந்து தொடங்கப்பட்டுள்ளது என்பதை நீங்கள் அறிவீர்கள்.

நிர்வாகப் பேரவை (கவர்னிங் போர்டு), பட்டியிலில் கண்ட ஆடிட்டர்கள் மற்றும் எஃப்ஏஎம்சி-க்கு நிதிச் சேவை அமைப்பை ஸோஹோ நிறுவன வள திட்டமிடல் (ERP) தளத்துடன் ஒருங்கிணைக்கவும், இந்திய ரிசர்வ் வங்கி (RBI) அங்கீகரிக்கப்பட்ட வங்கியால் வழங்கப்படும் சேவைகளுடன், பெருநிறுவன மற்றும் தனிப்பட்ட நிதி, வருமான வரி (IT) தணிக்கைகள் மற்றும் சைபர் பாதுகாப்பு ஆகியவற்றில் தேவையான அனைத்து இணக்கங்களுக்கும் இணங்க, அவற்றை இணைக்கவும் உத்தரவிட்டது.

வங்கிக்கு மாறுவது சட்டங்களுடன் இணங்குவதை உறுதிசெய்ய திட்டமிடப்பட வேண்டும், அதே நேரத்தில் நாட்டின் சட்டங்களால் அனுமதிக்கப்பட்ட அளவிற்கு சமூகத்தின் நன்மைக்காக சமூகத்தின் சொத்துக்களை வைத்திருப்பதில் கூட்டுத்தன்மை மற்றும் ஒற்றுமையின் ஆரோவில் பரிசோதனைக்கு இடமளிக்க வேண்டும்.

இலக்கு:

**தனிநபர் கணக்குகள்**
அனைத்து தனிப்பட்ட ஆரோவில்வாசிகளும் 2025 மார்ச்சு 31-க்குள் வங்கிக் கணக்குகளைத் திறக்க வேண்டும் (அவர்களுக்கு ஏற்கனவே வங்கிக் கணக்கு இல்லாத இடத்தில் அல்லது அவர்கள் தங்கள் வங்கிக் கணக்கை மாற்ற விரும்பும் இடத்தில்) மற்றும் ஆரோவில்வாசிகள் தங்கள் பணத்தை வங்கிக் கணக்குகளில் வைத்திருக்க ஊக்குவிக்கப்பட வேண்டும். நிதிச்சேவை (FS) அனைத்து உயர் மதிப்புள்ள நிலுவைகளையும் முன்னுரிமை அடிப்படையில் தங்கள் வங்கிக் கணக்குகளுக்கு மாற்றும்.

யூனிட்டுகள் மற்றும் சமூகக் கணக்குகளின் கணக்குகளை நிதிச்சேவை (FS) தொடர்ந்து பராமரிக்கும். அத்தகைய தனிப்பட்ட ஆரோவில்வாசி கணக்குகளில் உள்ள நிலுவைகளை அதன் தற்போதைய நிலையில் உள்ள தோராயமாக ரூ.25.00 கோடி இருப்பிலிருந்து நியாயமான மதிப்பாகக் குறைக்கப்படும், இது ஆரோவில்லில் அவர்களின் செலவினங்களுக்காக ஆரோவில்லில் முன்கூட்டியே பெறுதல்களாக நியாயப்படுத்தப்படலாம். எந்தவொரு ஆரோவில்வாசியின் தனிப்பட்ட கணக்கிற்கும் இருப்புக்கான வரம்பு ஒன்று/இரண்டு மாத பராமரிப்புத்தொகை மதிப்பாக இருக்கலாம். தனிப்பட்ட ஆரோவில்வாசியின் நிதிகளை ஆரோவில்லில் அதன் செலவினங்களுக்காக மட்டுமே நிதிச்சேவை வைத்திருக்க முடியும், மேலும் நிதிகளை பணமாகக் கையாள வேண்டிய அவசியமில்லை. பொதுவாக ஆரோவில் யூனிட்டுகளுக்குள் மட்டுமே செலவிடப்படும் பராமரிப்பு நிதி நிதிச்சேவை கணக்கில் வரவு வைக்கப்படும் (முன்னர் குறிப்பிட்டுள்ள வரம்புக்கு உட்பட்டது) மேலும் ஆரோவில்வாசிகள் பிற நோக்கங்களுக்காகப் பணம் எடுப்பதற்காக ஒதுக்கப்பட்ட எந்தவொரு தொகையும் நேரடியாக அவர்களின் வங்கிக் கணக்குகளில் வரவு வைக்கப்படலாம்.

மாதாந்திர அடிப்படையில், பராமரிப்பு நிதி ஆரோவில்வாசிகளுக்கு மாற்றப்படும்போது, மேற்கூறிய வரம்பை விட அதிகமான தொகை நிதிச்சேவை கணக்கில் அல்லாமல் அவர்களின் வங்கிக் கணக்குகளில் நேரடியாக செலுத்தப்படும்.

ஆரோவில்வாசிகள் அல்லது பிறருக்கு தேவைப்படும் இடங்களில் பணப்புழக்கத்தை வழங்க வங்கிகள் ஆரோவில்லில் ஏடிஎம்-களை அமைக்க வேண்டும்.

**குடியிருப்புக் கணக்குகள்**
ஒவ்வொரு குடியிருப்புக் கணக்கிற்கும் தனித்தனி குடியிருப்புக் கணக்குகள் நிதிச்சேவையால் பராமரிக்கப்படும். மீண்டும், இங்கு மாதத்திற்கு ரூ.7,500க்கு மேல் யாரும் பங்களிப்புத்தொகை செய்யக்கூடாது என்ற கொள்கையும், சமூகத்தின் அனைத்து உறுப்பினர்களின் மொத்த பங்களிப்புகளும் ஒரு **ஆண்டில்** ரூ.20 இலட்சத்திற்கு மிகாமல் இருக்கவேண்டும் என்ற கொள்கையும் இருக்கும். இந்த கணக்குகளிலிருந்து வரும் தொகைகள், நிதிச்சேவையின் எந்தவொரு கைமுறை தலையீடும் இல்லாமல், ஒரு ஆப்/ஐடி சிஸ்டம்கள் போன்றவற்றின் மூலம் நேரடி செயலாக்க பரிவர்த்தனைகளின் அடிப்படையில் பராமரிப்பு மற்றும் பிற செலவுகளுக்கு வழங்கப்படும்.

**நிறுவனக் (யூனிட்) கணக்குகள்**
ஆரோவில் நிறுவனங்களின் (யூனிட்களின்) கூட்டு நிதிகள் ஒரு ஒற்றை வங்கிக் கணக்கிலிருந்து இயக்கப்படும், இது பேக்-என்ட் (சர்வர் சைடு) உள்கட்டமைப்பாக செயல்படும்.
நிதிச்சேவையின் சாஃப்ட்வேர் ஃபிரன்ட்-என்ட் உள்கட்டமைப்பாகச் செயல்படும், கீழ்கண்டவற்றுக்கான செயல்பாடுகளை வழங்கும்:
அ) கூட்டு நிதிகளிலிருந்து யூனிட் வாரியான நிதி நிலையைப் பராமரித்தல்.
ஆ) யூனிட்களுக்கு இடையேயான நிதி பரிமாற்றங்கள்.
இ) பொருத்தமான கட்டுப்பாடுகளை உறுதிசெய்து பொதுவான வங்கிக் கணக்கிலிருந்து பரிமாற்றங்களை அனுமதித்தல்.
நிதிச்சேவை அதன் சாஃப்ட்வேரை மாற்றியமைக்கும், இதனால் பெறுநர்கள் தற்போதைய வங்கி நடைமுறைகளுடன் ஒத்துப்போக பணம் செலுத்துபவரின் நேர்மறையான உறுதிப்படுத்தல் இல்லாமல் பணம் எடுக்கும் திறனை முடக்கும்.
வங்கி சாஃப்ட்வேர் மற்றும் ஜோஹோ ஈஆர்பி சாஃப்ட்வேருடன் (யூனிட்களின் கணக்குப் பதிவுகள் பராமரிக்கப்படும்) பயன்பாட்டு நிரல் இடைமுகம் (ஏபிஐ) இணைப்பை செயல்படுத்த, நிதிச்சேவை அதன் சாஃப்ட்வேரை மாற்றியமைக்கத் தேவையான அனைத்தையும் செய்யும்.

**பொது விஷயங்கள்**
ஐசிஐசிஐ வங்கி அதன் ஐடி உள்கட்டமைப்பைக் கருத்தில்கொண்டு தற்காலிகமாக வங்கி கூட்டாளியாகக் கருதப்படுகிறது.
ஆரோவில் பவுண்டேஷன், ஆரோவில் பவுண்டேஷன் ஆடிட்டர்கள், எஃப்ஏஎம்சி, நிறுவனங்களின் (யூனிட்களின்) ஒரு பிரதிநிதியை உள்ளடக்கிய ஒரு குழு அமைக்கப்பட்டு, நுணுக்கமான விவரங்களைப் பெற்று, 2025 மார்ச்சு 31-க்குள் ஆரம்ப கட்டத்துடன் செயல்படுத்தப்படுவதை உறுதி செய்கிறது.

இது தகுதிவாய்ந்த அதிகாரியின் ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.
பி.எஸ்.சத்யநாராயண், கணக்கு அதிகாரி, 2-03-2025



## நில நிதி திரட்டுவோரின் செய்திமடல் – ஆரோவில்லின் 57வது பிறந்த தினம்- 28 பிப்ரவரி 2025

பிப்ரவரி 28ஆம் தேதி நன்னாளில் எங்கள் காலாண்டு செய்திமடலைப் பகிர்ந்து கொள்வதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம்! எங்கள் செய்திமடல் ஆரோவில்லின் வளர்ச்சியின் பின்னணியில் உள்ள மனிதக் கதைகளை - இலட்சியங்கள், ஆர்வங்கள், அர்ப்பணிப்பு பற்றிய கதைகள் மற்றும் ஆரோவில் மக்கள்தொகையின் பன்னாட்டு, பண்பாட்டுக் கலவையின் கதைகள் – முன்னோடிகள், புதியவர்கள், தன்னார்வலர்கள், நீண்டகால நண்பர்கள், ஆதரவாளர்கள் ஆகியோருடன் சேர்ந்து, அனைவரும் இந்நகரத்தின் தொலைநோக்குப் பார்வையையும் வாக்குறுதியையும் வளர்த்து அதன் நிறைவேற்றத்திற்கு அனைவரும் பாடுபடுகிறார்கள்!
**https://land.auroville.org/acres-for-auroville-a4a-aurovilles-birthday-newsletter/**

**1. ஏக்கர்ஸ் ஃபார் ஆரோவில் ஃப்ளையர் - 21 - 28 பிப்ரவரி 2025**
*ஸ்ரீ அன்னை இவ்வாறு எழுதினார்:* … "நாம் முழுவதும் இறுதியாக நமது அற்ப அகங்காரத்தில் இருந்து நம்மைப் பிரித்துக் கொண்டு, ஒழிக்க முடிந்தால், எல்லாவற்றையும் நிலைநிறுத்தி, கீழேயும் மேலேயும் உள்ள அனைத்து உலகங்களிலும் பரவியுள்ள மகத்தான பிரபஞ்ச நல்லிணக்கத்தைக் காணலாம்." பிரஞ்சு பதிப்பு பிடிஎஃப் மற்றும் தமிழ்ப் பதிப்பு பிடிஎஃப். **https://land.auroville.org/a4a-flier-21-to-28-february-2025/**

**2. எல்எஃப்ஏயு கடிதம் – 21 - 28 பிப்ரவரி 2025**
ஆரோவில்லின் பிறப்பு சூழலில், அதன் புற உடலும் ஆரோவில்லின் புற வருகையும் நமக்குத் தெரிந்தபடி, 28 பிப்ரவரி 1968 அன்று நடந்தது, ஆனால் பரந்த கண்ணுக்குத் தெரியாத புவியியலில், ஆரோவில் மிகவும் முன்னதாகவே பிறந்தது. பிரஞ்சு பதிப்பு பிடிஎஃப் மற்றும் தமிழ்ப் பதிப்பு பிடிஎஃப். **https://land.auroville.org/lfau-letter-21-february-2025/**

**3. எனது ஆரோவில் பயணம் - சமூகம், சேவை மற்றும் வளர்ச்சி - நவனிதா**
ஆரோவில்வாசி நவநீதா ஆரோவில்லிற்கு அருகிலுள்ள நடுகுப்பம் என்ற மீனவ கிராமத்தில் பிறந்தவர், மேலும் அவரது பெற்றோர் இருவரும் ஆரோவில்லில் சேர்ந்தனர். *"ஆரோவில்லின் இலட்சியங்களுக்கு அர்ப்பணிப்புடைய ஒரு குடும்பத்தில் வளர்ந்ததால், ஒற்றுமை, ஒத்துழைப்பு, குறிக்கோளுக்கான உணர்வு" ஆகியவற்றிற்கு மதிப்பளிப்பதை சிறு வயதிலிருந்தே நான் வளர்த்துக்கொண்டேன்."*
**https://land.auroville.org/my-auroville-journey-community-service-growth-by-navanitha/**

4. **பலுசிஸ்தானிலிருந்து ஆரோவில் வரை - அனிதா எழுதியது**
ஆரோவில்லில் புதிதாய்ச்சேர்ந்தோராக உள்ள அனிதா, ஈரானின் பலுசிஸ்தானில் பிறந்தவர். அவரது வாழ்க்கை இணைவுக்கான தேடலாக இருந்துள்ளது - கடந்த காலத்தையும் நிகழ்காலத்தையும், பாரம்பரியத்தை எதிர்காலத்துடனும், ஒரு கலாச்சாரத்தை மற்றொரு கலாச்சாரத்துடன் இணைத்தல். ஆரோவில்லைப் பற்றி அவர் கூறுகிறார்: *"இது மக்களிடையேயான எல்லைகளை கலைவது மட்டுமல்லாமல், தொடர்பையும் ஒற்றுமையையும் கண்டறியும் இடம்."* **https://land.auroville.org/from-baluchistan-to-auroville-by-anita/**

**5. மலர்கள் மற்றும் அவற்றின் அர்த்தங்கள் குறித்த ஆர்ட் ஃபார் லேண்ட் கண்காட்சி - ஆரோவில் மற்றும் ஆசிரம கலைஞர்கள்**

02.02.2025 அன்று, இந்த ஆண்டுக்கான "ஆர்ட் ஃபார் லேண்ட்" கண்காட்சியின் திறப்பு விழா யூனிட்டி பெவிலியனில் நடைபெற்றது - இது 30.03.2025 வரை நடைபெறும். ஆரோவில்லுக்கான பல்வேறு மலர்களுக்கு ஸ்ரீ அன்னை ஆழமான குறியீட்டு அர்த்தங்களை வழங்கியுள்ளார், மேலும் இந்த கண்காட்சி இதன் கருப்பொருளையும் ஹாசி கிராங்கோலாவின் பணியையும் கொண்டாடுகிறது.

**https://land.auroville.org/art-for-land-exhibition-february-2025/**

**6. எங்களது A4A புத்தாண்டு அட்டை மற்றும் 2025 நாட்காட்டி ஆகியவற்றை அறிமுகப்படுத்தினோம்**

எங்களின் புத்தாண்டு அட்டையானது ஆரோவில்லின் உள்ளுணர்வு, ஸ்ரீ அரவிந்தர், ஸ்ரீ அன்னை ஆகியோரின் எதிர்காலம் பற்றிய தொலை நோக்குப் பார்வையை ஆரோவில்லின் உலகளாவிய நண்பர்களிடையே பகிர்ந்து கொள்வதற்கான ஒரு வாய்ப்பாகும். இந்த ஆண்டு, பிலிப்பைன்ஸைச் சேர்ந்த ஆரோவில் கவிஞரும் தத்துவஞானியுமான ஜெக் எங்களது 2025 புத்தாண்டு அட்டையை அறிமுகப்படுத்தி வைத்தார்!

**https://land.auroville.org/inaugurating-our-a4a-new-year-card-2025/**

**7. ஆரோவில் பகுதியின் பாதுகாப்பிற்கான கூட்டுணர்வு**

ஏ4ஏ பிரச்சாரத்தின் நலன் விரும்பிகள் தங்களின் இலக்கிய, கலை அல்லது அறிவார்நத வெளியீடுகளை எங்களுக்கு பரிசளிப்பதன் மூலம் தங்களது கூட்டுணர்வை வெளிப்படுத்தும் வழிகளில் இதுவும் ஒன்றாகும். சமீபத்திய மாதங்களில் மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்வதற்காக இதுபோன்ற நான்கு ஊக்கமளிக்கும் அசல் படைப்புகளைப் பெற்றுள்ளோம். அவற்றில் ஏதேனும் ஒன்றை நீங்கள் பெற விரும்பினால், உங்கள் வேண்டுகோளை அனுப்பவும்: **lfau@auroville.org.in** **https://land.auroville.org/solidarity-for-safeguarding-the-auroville-area/**

**8. ஊக்கமளிக்கும் மேற்கோள் - ஸ்ரீ அரவிந்தரின் "மனித சக்கரத்தில்" இருந்து**

*"நவீன சமூகம் இருப்பு, முன்னேற்றம் என்ற புதிய கொள்கையைக் கண்டுபிடித்துள்ளது, ஆனால் அந்த முன்னேற்றத்திற்கான நோக்கத்தை ஒருபோதும் கண்டுபிடிக்கவில்லை... புதிய உள்நோக்கிய திருப்பத்தில், இப்போது தொடங்கியுள்ள ஒரு பெரிய அகநிலையை நோக்கி, ஒரு சிறந்த நம்பிக்கை உள்ளது; ஏனெனில்... மனிதனின் உண்மையான உண்மை அவனது உள்ளத்தில் காணப்பட வேண்டும்...*

**https://land.auroville.org/inspiring-quotes-the-human-cycle/**

**எங்களின் 11 ஆண்டுகால நிலம் வாங்கும் பணியை சாத்தியமாக்கிய அனைத்து நன்கொடையாளர்கள், கலைஞர்கள், ஆதரவாளர்கள் ஆகியோருக்கு மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம் - ஒரு காலத்தில் தவறவிட்ட 160 ஏக்கர் மாஸ்டர்பிளான் நிலம், இப்போது ஆரோவில்லின் ஒரு பகுதியாக உள்ளது. இந்த ஆற்றல்மிக்க கூட்டு ஒத்துழைப்புக்கு நன்றி! ஆரோவில்லின் நில ஒருங்கிணைப்பு பணி முடியும் வரை ஒன்றிணைந்து முன்னேறுவோம்!**

தொடர்புக்கு: : **lfau@auroville.org.in** மற்றும் **+91 413 2622657**
நன்கொடை அளிக்க: **https://land.auroville.org/new-banking-information/** மற்றும் **https://land.auroville.org/**

---

## அறிவிப்புகள் (Announcements)

AUROFILM

**மல்டி மீடியா சென்டர் அரங்கம் (எம்எம்சி, டவுன் ஹால்)**
(MULTI MEDIA CENTRE AUDITORIUM (MMC, Town Hall)

**மார்ச்சு** 14 **வெள்ளிக்கிழமை இரவு** 8:00 **மணிக்கு, "ஏ ராயல் அஃபையர்" -"A ROYAL AFFAIR" (En Kongelig Affære)**
இயக்குநர்: **நிகோலஜ் ஆர்செல்**, டென்மார்க், 2012.
நடிப்பு: ஆலிஸ் விகந்தர், மேட்ஸ் மிக்கேல்சன் மற்றும் மிக்கேல் ஃபோல்ஸ்கார்ட்.

சுருக்கம்: டென்மார்க், 1770. மன்னரின் மருத்துவரான செல்வாக்கு மிக்க ஸ்ட்ரூன்சி மீது இராணி கரோலின் மதில்டே வைத்திருக்கும் இரகசிய ஆர்வம், முழு தேசத்தின் தலைவிதியையும் என்றென்றும் மாற்றிவிடும். "இராணியும் அவரது மருத்துவரும்" என்ற புத்தகம், பிரெஞ்சு பள்ளிப் பாடப்புத்தகங்களில் மறக்கப்பட்ட டேனிஷ் வரலாற்றின் ஒரு முக்கியமான அத்தியாயத்தைச் சொல்கிறது. ரூசோ மற்றும் வால்டேர் போன்ற அறிவொளி தத்துவஞானிகளால் பெரிதும் பாதிக்கப்பட்ட கரோலின் மதில்டே மற்றும் ஸ்ட்ரூன்சி இடையேயான காதல் மற்றும் அறிவுசார் உறவு, நிறுவப்பட்ட சமூக ஒழுங்கை கவிழ்க்க வழிவகுக்கிறது மற்றும் இருபது ஆண்டுகளுக்குப் பிறகு ஐரோப்பா முழுவதும் வெடிக்கும் புரட்சிகளை முன்னறிவிக்கிறது. ஒரு உண்மைக் கதையை அடிப்படையாகக் கொண்ட இந்தப் படம், பெர்லின் திரைப்பட விழாவில் இரண்டு வெள்ளி கரடிகளைப் பெற்றது, மேலும் 2012 ஆம் ஆண்டில் சிறந்த வெளிநாட்டு மொழித் திரைப்படத்திற்கான ஆஸ்கார் மற்றும் கோல்டன் குளோப் விருதுகளுக்குப் பரிந்துரைக்கப்பட்டது.

*அசல், டேனிஷ், ஸ்வீடிஷ், ஜெர்மன் மொழிப்படம், ஆங்கிலத் துணை வாசகங்களுடன். காலம்: 2 மணிநேரம் 16 நிமிடம்.*
குறிப்பு: நன்கொடைகள் வரவேற்கப்படுகிறது! - ஆரோஃபிலிம் கலெக்ஷன் நிதிச்சேவை எண்- 252658

---

## **ஒரு அனுபவமிக்க சத்யானந்தா யோகா நிகழ்ச்சி** (An Experiential Satyananda Yoga Program)




**சத்யானந்தா யோகா மையம் மற்றும் பாரத் நிவாஸ் வழங்கும்**

**மார்ச்சு 16, ஞாயிற்றுக்கிழமை, காலை 7 - 10 மணி, சாச்சு, பாரத் நிவாஸ், ஆரோவில்**
**வழங்குபவர் - எஸ்என். ஷிவாரிஷி அவர்கள்**

“ஒரு அனுபவமிக்க சத்யானந்தா யோகா நிகழ்ச்சி” மார்ச்சு 16 அன்று, பாரத் நிவாஸில் உள்ள சாச்சு ஹாலில் நாங்கள் ஏற்பாடு செய்கிறோம் (சத்யானந்தா யோகா மையம்-சென்னை) இந்த நிகழ்ச்சி முதன்மையாக ஆரோவில் மக்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த நிகழ்ச்சி சேவாக (SEVA) ஆக செய்யப்படுகிறது, மேலும் எந்த கட்டணமும் வசூலிக்கப்படவில்லை.
பதிவு செய்வதற்கான இணைப்பை கீழே பார்க்கவும். நன்றி. *அன்புடன், டாக்டர் சௌந்தர்யா - எஸ்ஒய்சி, மோனிஷா - பாரத் நிவாஸ் குழு.*
https://www.syctchennai.com/satyananda-yoga-auroville/

---



## **உடலினுள் ஆழ்ந்த அகப் பயிற்சி செய்தல்** (Deeper Body workshop announcement)

**சாவித்ரியின் மந்திர வசனங்கள், ஹூடாவின் ஓவியங்கள்**
**ஆகியவற்றின் கண்ணோட்டத்தில்,**
**அருள் தேவ் அவர்களுடன் உடலினுள் ஆழ்ந்த அகப் பயிற்சி செய்தல்.**
**2025 மார்ச்சு 8 மற்றும் 22, சனிக்கிழமைகளில், மாலை 4:00 - 5:00 மணி வரை,**
**சாவித்ரி பவனின் சங்கம் ஹால்**
அனைவரும் வருக.

## **பெயர்கள் சேர்க்கை & நீக்கம்** (Admissions & Terminations)

புதிதாய்ச்சேர்ந்தவர்கள் (நியூகம்மர்) மற்றும் புதிதாய்ச்சேர்ந்தவர்களாக ஆக விரும்பும் அன்பான ஆரோவில் தன்னார்வலர்களுக்கு, ஆரோவில்லின் வாழ்த்துக்கள்!

ஆரோவில் பவுண்டேஷன் (குடியிருப்பாளர்களின் பதிவேட்டில் நபர்களின் பெயர்கள் சேர்க்கை மற்றும் நீக்கம்) விதிமுறைகள், 2023-இல் குறிப்பிடப்பட்டுள்ளபடி, நிர்வாகப் பேரவை (கவர்னிங் போர்டு) சேர்க்கை & நீக்க ஆய்வுக் குழு (ஏடிஎஸ்சி) (Admissions & Terminations Scrutinising Committee (ATSC) மற்றும் சேர்க்கை & நீக்கப் பதிவேடு (ஏடிஆர்) (Admissions & Terminations Registry (ATR) ஆகியவற்றை உருவாக்கியுள்ளது என்பதை நாங்கள் மகிழ்ச்சியுடன் அறிவிக்கின்றோம்.

இந்த விதிமுறைகள் மற்றும் ஏடிஎஸ்சி (ATSC) மற்றும் ஏடிஆர் (ATR)-ஐ உருவாக்கும் அலுவலக உத்தரவு, மற்றும் ஆரோவில் பவுண்டேஷன் (குடியிருப்பு அளவுகோல்கள்) நிலை ஆணை, 2024 ஆகியவற்றை இங்கே காணலாம்:
https://auroville.org.in/article/99949

கீழே இணைக்கப்பட்டுள்ள கூகிள் படிவத்தை நிரப்பவும், இதன் மூலம் உங்கள் நிலைமை, கேள்விகள், கவலைகள் மற்றும் தேவைகள் குறித்து எங்களுக்குத் தெரிவிக்கலாம். https://forms.gle/TCHCe135oQBfqFFs7

ஏடிஎஸ்சி (ATSC) மற்றும் ஏடிஆர் (ATR)- முழுமையாக செயல்பாட்டுக்கு வரும்போது, உங்கள் செயல்முறையை விரைவில் நாங்கள் முன்னெடுத்துச் செல்வோம், தேவைப்பட்டால் எங்களைச் சந்திக்க உங்களை அழைப்போம்.

புதிய விதிமுறைகளை எதிர்த்து குடியிருப்பாளர்கள் தாக்கல் செய்த ரிட் மனுவில் சென்னை உயர்நீதிமன்றத்தின் இடைக்கால உத்தரவுக்கு இணங்க, குடியிருப்பாளர்களின் பதிவேட்டில் பெயர்களைச் சேர்ப்பது தற்போதைக்கு இறுதி செய்யப்படாது என்பதை நினைவில் கொள்ளவும்.

உங்களில் பலர் இந்த செய்திக்காக ஆவலுடன் காத்திருக்கிறீர்கள் என்பதை நாங்கள் அறிவோம். குறிப்பாக, இந்த முக்கியமான காலகட்டத்தில், ஆரோவில்லின் பரிணாம வளர்ச்சியில் உங்கள் அனைவருக்கும் நல்வாழ்த்துக்களைத் தெரிவிக்க இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்கிறோம்.

இந்த சாகசத்தில் பங்கேற்க விரும்பும் அனைவருக்கும் நாங்கள் நன்றியுள்ளவர்களாக இருக்கிறோம்.
நீங்கள் இங்கே இருப்பதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம்!
நம்பிக்கையுடனும் ஒத்துழைப்புடனும், உண்மையின் சேவையில், ஏடிஎஸ்சி மற்றும் ஏடிஆர் குழுக்கள்.
நீங்கள் எங்களை atr@auroville.org.in என்ற மின்னஞ்சல் முகவரியில் தொடர்பு கொள்ளலாம்

*"ஒரு இணக்கமான கூட்டுமுயற்சி, சூழ்நிலைகளின் போக்கையே மாற்றும்"* - ஸ்ரீஅன்னை

## 15வது ஆரோவில் மராத்தானில் நீங்கள் அளித்த ஆதரவுக்கு மனமார்ந்த நன்றி

(Heartfelt Thanks for Your Support at the 15th Auroville Marathon)

16.02.2025 அன்று நடைபெற்ற 15வது ஆரோவில் மராத்தான் முழு வெற்றி பெற்றது என்பதை மகிழ்ச்சியுடன் பகிர்ந்து கொள்கிறோம்! நீங்கள் இன்றி இந்த சாதனை சாத்தியம் ஆகியிருக்காது. இந்த நிகழ்வை மறக்கமுடியாத அனுபவமாக மாற்றுவதில் உங்களது அர்ப்பணிப்பு, ஆதரவு, சுறுசுறுப்பான பங்கேற்பு ஆகியவை முக்கியப் பங்கு வகித்தன.

நீங்கள் ஏற்பாட்டுக் குழுவிலோ, தன்னார்வலராகவோ அல்லது பங்கேற்பாளராக இருந்திருந்தாலும், உங்களது பங்களிப்புகள் இந்த நிகழ்வை உயிர்ப்பிக்க உதவியது. உங்களின் ஆதரவு, ஊக்கம், நற்குணத்தை அனைவரும் உணர்ந்தனர், அது மராத்தான் நிகழ்வின் முடிவில் குறிப்பிடத்தக்க மாற்றத்தை ஏற்படுத்தியது. இந்த நிகழ்வைச் சிறப்பிக்க நீங்கள் அர்பணித்த நேரம், முயற்சி மற்றும் வளங்களை நாங்கள் உண்மையிலேயே பாராட்டுகிறோம்.

உங்களின் உறுதியான ஆதரவுக்கும் ஊக்கத்துக்கும் மராத்தான் அணியினர் அனைவரும் எங்களது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். இந்த நிகழ்விற்கான உங்களது அர்ப்பணிப்பு, இதுபோன்ற அர்த்தமுள்ள, சமூகம் சார்ந்த அனுபவங்களைத் தொடர்ந்து ஏற்பாடு செய்வதற்கான எங்களது உறுதியை வலுப்படுத்தியுள்ளது.

முன்னோக்கி பார்க்கும்போது, எதிர்காலத்தைப் பற்றியும், நாம் ஒன்றாகச் சேரப்போகும் மைல்கற்களைப் பற்றியும் உற்சாகமாக இருக்கிறோம். வரும் ஆண்டுகளில் இன்னும் பல வெற்றிகரமான நிகழ்வுகளை நடத்த உங்களது ஆதரவை நாங்கள் தொடர்ந்து எதிர்பார்க்கிறோம்.

மீண்டும் ஒருமுறை, இந்த நம்பமுடியாத பயணத்தின் ஒரு பகுதியாக இருந்தமைக்கு நன்றி. உங்களது பங்கேற்பும், உற்சாகமும் எங்களுக்கு விலைமதிப்பற்றது. உங்களது தகவலுக்கு, இந்த நிகழ்வின் நிதிநிலை விபரத்தை அடுத்த வாரம் வழங்குவோம்.
நன்றி & வணக்கம், *ஆரோவில் மராத்தான் ஏற்பாட்டுக் குழு*

---

## ஆரோவில்லில் புதிய முயற்சிகளுக்கு தொடக்கமாக தமிழ்நாடு ஸ்டார்ட்அப் தொழில்முனைவு திட்டம்

(Startup Tamilnadu Entrepreneurship Program Sparks New Initiatives in Auroville)

மார்ச் 1 அன்று யூனிட்டி பெவிலியனில் நடந்த நிகழ்வு, காப்பீடு மற்றும் தொலைத்தொடர்பு நிபுணர்கள் முதல் ஏஐ, மொபைல் பயன்பாடுகள் மற்றும் படைப்பாற்றல் மிக்க ஸ்டார்ட்-அப்களில் புத்தாக்கர்கள் வரை துடிப்பான பங்கேற்பாளர்களை ஒன்றிணைத்தது. இந்த ஊக்கமளிக்கும் அமர்வு பல்வேறு தொழில்முனைவோர் கருத்துக்களை வெளிப்படுத்தியது மட்டுமல்லாமல், தனிப்பட்ட இலாபத்தை விட கூட்டுச் சேவைக்கான ஆரோவில்லின் உறுதிப்பாட்டை வலுப்படுத்தியது.

யூனிட்டி பெவிலியன், இளைஞர்கள் கல்வி மையம், ஃப்ளூரிஷ், தளம் ஆகியவற்றின் தாராளமான ஆதரவுடன், இந்தத் திட்டம் வழக்கமான சந்திப்புகளுக்கு மேடை அமைத்துள்ளது. இந்த அமர்வுகள் அருகிலுள்ள கிராமங்களில் உள்ள ஸ்டார்ட்அப்களுக்கான சமூக தொழில்முனைவு மற்றும் இணக்க ஆதரவில் கவனம் செலுத்தும், இது எங்கள் தனித்துவமான சுற்றுச்சூழல் அமைப்பின் மேலும் வளர்ச்சியைத் தூண்டும்.

ஆரோவில்லின் உயர்ந்த நோக்கத்துடன் புதுமைகளை தொடர்ந்து கலக்கும் எங்கள் வரவிருக்கும் முயற்சிகள் குறித்த கூடுதல் தகவல்களுக்கு காத்திருக்கவும். இதில் பங்கேற்க விரும்பினால், மின்னஞ்சல் அல்லது வாட்ஸ்அப் மூலம் என்னைத் தொடர்பு கொள்ளலாம் (மின்னஞ்சல் - sivakumar@auroville.org.in, வாட்ஸ்அப்- +919486340513). *மிக்க அன்புடன், சிவகுமார்*

---

## ஆரோவில் இந்தியப் பெவிலியன், பாரத் நிவாஸ் வழங்கும்



**ரம்ஷா நௌஷாத்** அவர்களின் "**Melting" - மெல்ட்டிங்" (உருகுதல்)**

தெய்வீக பதிவிறக்கங்கள் 24° 29' 24" N, 86° 40'38" E.
வாருங்கள், திரவ வைரமாக உருகுவோம்.

**13 மார்ச் 2025 வியாழன், மாலை 07:00 மணி.**
**இடம்: சாச்சு, பாரத் நிவாஸ், ஆரோவில்**

*விசாரணை தொடர்புக்கு: கிருஷ்ணா +91 97878 80211.*
*மெயின் கேட்டிற்கு வெளியே வாகனம் நிறுத்தும் வசதி உள்ளது*

---